

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 171

சனிக்கிழமை
16 மே 2026

வைகாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

இந்த வருடத்துக்குள்

# மாகாணத் தேர்தல் நிச்சயம் நடக்கும்!

## அமைச்சர் அபேசன உறுதி

**கொழும்பு, மே 16**

**இந்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது - இவ்வாறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்தார்.**

»11



## குமுதினிப் படுகொலைகள் 41ஆவது நினைவு நேற்று!

யாழ்ப்பாணம், மே 16
குமுதினிப் படகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டவர்களின் 41ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. 1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்

»11

## யாழ்.பல்கலையில் இன்று நினைவாயுதம் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 16
முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை வாரத்தை முன்னிட்டு, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'நினைவாயுதம்' என்ற ஓவிய, புகைப்பட மற்றும் ஆவணக் கண்காட்சி

»11




## ஆசிரிய இடமாற்றத்தில் வடக்கில் முறைகேடுகள்

கொட்டும் மழையிலும் ஆசிரியர்கள் போராட்டம்

**விரிவு பக்கம்:- 11**

காங்கேசன்துறை – நாகபட்டினம்

## பயணிகள் கப்பற்சேவை தொடர் இழுபறி நிலை!

யாழ்ப்பாணம், மே 16
காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே இடம்பெற்று வரும் பயணிகள் கப்பற்சேவை தொடர்ந்தும் இழுபறியாகியுள்ளது. ஆதலால், எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை அந்தக் கப்பல் காங்கேசன்

»11

## போதனாவின் சேவையில் பின்னடைவு இல்லை!

போதியளவு மருந்துகள் இருப்பில்
பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்

யாழ்ப்பாணம், மே 16
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியம் எரிந்து அழிந்தாலும், பொதுமக்களுக்கான சேவைகள் எந்தப் பின்னடைவும் இல்லா

»11

வட்டுக்கோட்டைத் தீர்மானம்

## ஜூன் 20ஆம் திகதியே நினைவெழுச்சி மாநாடு

**விரிவு பக்கம்:- 11**


## புலிகளுக்கு ஆதரவானோர் திருச்சபைக்குள் உள்ளனர்!

வத்திக்கான் தூதரகத்தில் முறைப்பாடு

கொழும்பு, மே 16
விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாடு உள்ளளோர் கத்தோலிக்க திருச்சபைக்குள் உள்ளனர் - இவ்வாறு கொழும்பிலுள்ள வத்திக்கான் தூதரகத்தில்

»11

## இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை உடன் விடுவிக்குக!



கொட்டும் மழைக்கு மத்தியில்
மயிலிட்டியில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 16
வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, மயிலிட்டியில் கொட்டும் மழைக்கு மத்தியில் மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வலிகாமம் வடக்கில் படையினரின் பிடியில் உள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி, ஜே/256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றுவரும் இந்தப் போராட்டம் கடும் மழைக்கு மத்தியில் நேற்றும் தொடர்ந்தது.

»11

வலி.வடக்கில்

## தறப்பாள் கட்டவும் அனுமதிக்க மாட்டோம்

பொதுமக்களிடம் பொங்கிய
பலாலி பொலிஸ் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், மே 16
அதியுயர் பாதுகாப்பு வலயமான வலி.வடக்கில், மழைக்குத் தறப்பாள் கட்டக்கூட அனுமதிக்க முடியாது என்று பொதுமக்களிடம் பொங்கியுள்ளார் பலாலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி.
வலி.வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணி

»11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4432
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 25 44 71 75
விசேட எழுத்து: L

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1499
வெற்றி இலக்கினம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 22 31 49 51

**NLB ஜய**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0458
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 7 1 7 4

**மெகா பவர்**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2538
ஆங்கில எழுத்து: L
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கங்கள்: 41 49 56 60

**மஹஜன சம்பத**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6190
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 4 7 3 5 1 4

**தன நிதானய**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2220
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 07 21 73 75
விசேட எழுத்து: K

**சுப தவசக்**
திகதி: 15.05.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0306
வெற்றி இலக்கினம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 30 49 63

# கொட்டித்தீர்க்கும் மழையால் 3,000க்கு மேற்பட்டோர் தத்தளிப்பு

**7 மாவட்டங்களில் பாதிப்பு**
**நீரில் மூழ்கியது புத்தளம்**
**ரயில் பாதைகள் துண்டிப்பு**

கொழும்பு, மே 16

**இலங்கையில் நிலவும் கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக 7 மாவட்டங்களில் 3000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்குக் காரணமாக ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

புத்தளம், இரத்தினபுரி, காலி, கேகாலை, மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையினால் 1,113 குடும்பங்களைச்சேர்ந்த 3,475 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

489 குடும்பங்களைச் சேர்ந்த 1,310 பேர் 8 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 1,264 பேர் 6 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் சுமார் 88 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பதுளை, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மதவாச்சி இடையிலான ரயில் போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. மலையக ரயில் பாதையில் ரம்புக்கனை முதல் அம்பேவெல வரைபோக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. கண்டியிலிருந்து தலாத்துஓயா செல்லும் வீதியில் உட தெல்தோட்ட பாலம் தாழிறங்கியுள்ளதால் மூடப்பட்டுள்ளது. இலங்கைக்கு வடகிழக்கே நிலைகொண்டுள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் காரணமாக, அடுத்த 36 மணித்தியாலங்களில் மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## 40 நீர்த்தேக்கங்கள் வான்பாய்வு

கொழும்பு, மே 16

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 21 பிரதான நீர்த்தேக்கங்களும், 19க்கும் மேற்பட்ட நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் தற்போது வான் பாய்கின்றன என நீர்ப்பாசன பணிப்பாளர் நீர் முகாமைத்துவ பொறியியலாளர் எச்.எம்.பி.எஸ்.டி ஹேரத் தெரிவித்துள்ளார். அதேவேளை நேற்றுராஜாங்கனைநீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் தலா 3 அடி வீதம் திறக்கப்பட்டு, விநாடிக்கு 1,600 கன அடிக்கும் அதிகமான நீர் கலா ஓயாவுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நிலவும் தொடர் மழையால் மரக்கறி விநியோகம் மந்தம்

கொழும்பு, மே 16

நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக மரக்கறி விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் நாள்களில் மரக்கறிகளின் விலைகள் உயரக்கூடும் என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். தற்போதைய மழைக்கால நிலைமை மேலும் சில நாள்களுக்குத் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பைத் தொடர்ந்து, சந்தைக்கு வரும் மரக்கறிகளின் அளவு குறையக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பேலியகொட மெனிங் சந்தை வர்த்தகர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.எம். உபாசேன இது தொடர்பாகத் தெரிவித்தபோது, தற்போது ஓரளவு மரக்கறி விநியோகம் உள்ள போதும், வரும் நாள்களில் விநியோகத்தில் தட்டுப்பாடு நிலவக்கூடும்.

விநியோகம் குறையும்போது சந்தையில் மரக்கறி விலைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது - என்றார். (எ-இ)

## அதிகூடிய மழைவீழ்ச்சி அவிசாவளையில் பதிவு



அவிசாவளை, மே 16

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுக்காலை 5 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழைவீழ்ச்சி அவிசாவளையில் பதிவாகியுள்ளது என்று நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மா ஓயா, கிரிஉல்ல பகுதியில் பெய்த கடும் மழையினால் மா ஓயாவின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. களு, கிங், நில்வலா கங்கைகளை அண்டிய, இந்தப் பகுதிகளில் 50 மில்லிமீற்றர் முதல் 100 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 0898
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கம்: 8 5 4 5 9 4

**Super Ball**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3164
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கம்: 32 33 51 56

**சனிதா**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கம்: 24 52 60 74
வெற்றி வாரம்: 5325

**SASIRI**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 0994
வெற்றி இலக்கம்: 10 18 44

**லக்ன ராசி**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
தனுசு
வெற்றி இலக்கம்: 09 42 44 62
சீட்டிழுப்பு வாரம்: 4876

**KAPRUKA**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: H
சுப்பர் இலக்கம்: 06
வெற்றி இலக்கம்: 07 34 43 49
வெற்றி வாரம்: 2340

**அத கோடிபதி**
திகதி: 15.05.2026
தினம்: வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கம்: 04 24 25 34
வெற்றி வாரம்: 2990

## கடலுக்குச் செல்வோருக்கு வானிலை முன்னறிப்பு!

கொழும்பு, மே 16

நாட்டுக்கு வடகிழக்காக நிலைகொண்டுள்ள காற்றமுத்தத் தாழ்வு நிலைமை, எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் நாட்டைவிட்டு விலகும் சாத்தியம் உள்ளது என்று நேற்றுக் காலை வெளியிட்ட வானிலை எதிர்வுகூறல் அறிக்கையில் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்துவரும் சில நாள்களுக்கு நாட்டைச் சூழவுற்ற கடற்பரப்புக்களில் காற்றின் வேகமும், மழை நிலைமையும் அதிகரித்துக் காணப்படும் சாத்தியம் உள்ளதால், கடலில் பயணம் செய்வோரும், மீனவர்களும் வாளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் முன்னறிவிப்புகளை அவதானிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. திருகோணமலையிலிருந்து காங்கேசந்துறை, புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அந்தக்கடல் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# ஊழல் வழக்குகளின் விசாரணை துரிதம்!

## அமைச்சர் வசந்த தகவல்

கொழும்பு, மே 16

**முன்னைய ஆட்சியாளர்கள் செய்த ஊழல்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எமது அரசாங்கத்தில் எவருக்கும் சட்டத்திலிருந்து தப்பிச் செல்லமுடியாது என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விதிமுறைக்கு அமையவே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டத்தை எவரும் கையில் எடுக்கமுடியாது. எயார்பஸ் கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் கபில சந்திரசேனவிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாக முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. இதனை விசாரணைப் படிமுறைகளின் ஒரு அங்கமாகவே பார்க்கவேண்டும். முன்னாள் ஆட்சியாளர்களான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். எமது அரசாங்கத்தில் எவருக்கும் சட்டத்திலிருந்து தப்பிச் செல்லமுடியாது. சட்டத்தை எவரும் வளைக்க முடியாது என்பதை ஜனாதிபதி மிகத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளார் - என்றார். (ச-இ)

## 734 பேர் கைது

கொழும்பு, மே 16

நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 734 பேர் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்களிடமிருந்து 277 கிராம் ஹெரோயின், 451 கிராம் ஐஸ், 2 கிராம் கொக்கெய்ன், 3 கிலோ 316 கிராம் கஞ்சா, 2,127 கஞ்சாச் செடிகள், 2 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 8 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 747 போதைமாத்திரைகள், 466 கிராம் மதனமோதகம் மற்றும் 89 கிராம் மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## விசாவின்றி தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, மே 16

இரு வேறு இடங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில், முறையான விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் கீழ் 17 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாஸ்கடுவ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்த 14 வெளிநாட்டுப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேர் சீன நாட்டவர்கள் என்றும், இருவர் மலேசிய நாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகாபுரி பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் திருகோணமலை பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது, விசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த 49 மற்றும் 50 வயதுடைய 3 இந்தியப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)



## இலங்கைக்கு வந்தது 'சுனைனா'

கொழும்பு, மே 16

இந்தியக் கடற்படைக் கப்பலான சுனைனா, நேற்றுக் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தியக் கடற்படைக் கப்பலான சுனைனா 16 நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டுக் கடற்படையினருடன் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தியக் கடற்படையின் நட்புறவுப் பாலங்களை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தக் கப்பல் இலங்கைக்கு வந்துள்ளது. பங்களாதேஷ், இந்தோனேசியா, கென்யா, மலேசியா, மாலைத் தீவு, மொரிஷியஸ், மொசாம்பிக், மியன்மார், சிங்கப்பூர், சீஷெல்ஸ், தென்னாபிரிக்கா, தான்சானியா, தாய்லாந்து, திமோர் லெஸ்டே மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கடற்படை அதிகாரிகள் இந்தக் கப்பலில் வந்துள்ளனர். (எ-இ)

## கடற்றொழிற்றுறைக்கு ஜப்பான் உதவிக்கரம்!

கொழும்பு, மே 16

இலங்கையின் கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள நவீன தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க ஜப்பான் தயாராக இருப்பதாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தூதுவருக்கும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் இடையே தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது கடற்றொழில் அமைச்சின் எதிர்கால இலக்குகள் மற்றும் இலங்கையின் கடல் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து அமைச்சர் தூதுவரிடம் எடுத்துரைத்தார். கடற்றொழிற்றுறையில் ஜப்பான் பெற்றுள்ள நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அமைச்சரின் விளக்கங்களைக் கேட்டறிந்த ஜப்பான் தூதுவர், இலங்கையின் கடற்றொழில் துறையை நவீனமயப்படுத்துவதற்கும், புதிய புத்தாக்கத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் ஜப்பான் அரசாங்கம் எப்போதும் தயாராக இருப்பதாக உறுதியளித்தார். (ச-இ)




## ஒண்டவிட்ட ஒருநாள்..!

**யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குப் போற ரெயின் ஒளிச்சுப் பிடிச்சு விளையாடிக் கொண்டிருக்குது. தண்டவாளத்தைச் சீரமைக்கிறம், யானையள் அடிபட்டுச் சாகாமல் அதுகள் போய்வர பாலம் கட்டுறம் எண்டு வருசக்கணக்கா வடக்குக்கு வாற ரெயினை நிப்பாட்டி வைச்சு, இப்பதான் ஏதோ ஒரு வழியாத் தொடங்கினவை. ஆனா, அதுவும் ஒழுங்கா ஓடுறேலை எண்டு சனங்கள் புலம்புத்தொடங்கிட்டினம்.**

**'யாழ்தேவி' ரெயின் இனிமேல் 'ஒண்டவிட்ட ஒருநாள்' தான் ஓடுமாம். பாதையும் திருத்தியாச்சு, பாலமும் கட்டியாச்சு. பிறகேன் ஒருநாள் யாழ் தேவிக்கு லீவு குடுக்கினம். சிலவேளை கனகாலமா ஓடினதால யாழ்தேவி கிழண்டிப்போட்டுதெண்டு இப்பிடி ஒருநாள் ஓடினால் அடுத்த நாள் இவையள் ரெஸ்ட் குடுக்கினமோ தெரியேலை. ஏன் இப்பிடி ஒண்டவிட்ட ஒருநாள் ரெயினை ஓடுறியள் எண்டு கேட்டால், அதுக்கு ரெயில்வே திணைக்களம் ஒண்டுமே சொல்லுதில்லை. இப்ப உலகம் சுருங்கிப் போட்டுது.ரெக்னிக்கல் அறிவெல்லாம் இப்பத்தைய ஏ.ஐ. யுகத்தில செட்டையடிச்சுப் பறக்குது. எல்லாரும் முந்தி ஒரு வேலைக்கோ பயணத்துக்கோ செலவழிச்ச நேரத்தை விட இப்ப குறைஞ்ச நேரத்தில அதுகளைச் செய்யக்கூடிய வல்லமை வந்திட்டுது. ஆனால் எங்கட ரெயின் சேவையில மட்டும் இது தலைகீழ்.**

**முந்தியெண்டால் விடியப்பிறம் ரெயினில ஏறினால் மத்தியானம் கொழும்பில இறங்கி எங்கட வேலையளை முடிச்சுப்போட்டு, பின்னேரக்கையோட அங்கையிருந்து ரெயினில வெளிக்கிட்டால் இரவே திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு வந்திடலாம். இப்ப என்னவெண்டால், போக ஒரு நாள். வர ஒரு நாள் எண்டு ரெயின்ல போறதே பெரும் இழுபறியாக் கிடக்கு. அதைவிட 'ஸ்ரீதேவி', 'உத்தரதேவி' எண்டு நல்லா ஓடிக்கொண்டிருந்த ரயில்களும் இப்ப எங்கை போனது எண்டே தெரியேலை. அதைப்பற்றி ஒருத்தரும் கேக்கிறதும் இல்லை, ஒருத்தரும் அதுகளைத் திரும்ப ஓடவைக்க நடவடிக்கை எடுக்கிறதும் இல்லை. அதைவிட யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில 'ஷோர்ட் சேர்விஸ்' போய்வந்து கொண்டிருக்கிருக்கிற 'யாழ் ராணிக்கும்' அடிக்கடி வருத்தம் வந்து இடைவழியிலேயே நிக்கிறதுதான் கூடவாக் கிடக்காம். என்னதான் பெற்றோல், டீசல் எல்லாம் இப்ப தாராளமா இருந்தாலும் திரும்ப ஈரானில சண்டை தொடங்கினால் பழைய குருடி கதவைத் திறவடி எண்டமாதிரி எல்லாரும் பெற்றோல் செற்றுகளுக்கு முன்னால லைனில நிக்கிற நிலைமை இன்னும் விலகேலை. அப்ப இப்பவே எரிபொருள்களை சிக்கனமாப் பாவிச்சால் இன்னும் எங்கட எரிபொருள் இருப்பைக் கூட்டலாம். அதுக்கு எல்லாரும் பொதுப்போக்குவரத்தைக் கூடப் பாவிக்கவேணும். ஆனால் பொதுப்போக்குவரத்து எண்டதும் எல்லாருக்கும் உடன நினைவுக்கு வாற ரெயினை நிப்பாட்டி வைச்சால் என்னெண்டு எரிபொருளைச் சிக்கனமாப் பாவிக்கமுடியும் எண்டு கேக்கோணும் போல கிடக்கு கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை வேறிடத்தில் குடியமர்த்தினாலும் ஆரம்பக் குடியிருப்புகளை பறிக்கக்கூடாது



## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, மே 16

**கல்விளான் கிராம மக்களை வெள்ள இடர் காரணமாக மாற்று இடங்களில் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அவர்களது தற்போதைய வீடுகளை அழித்து, காணிகளைப் பறிக்கக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.**

துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பருவப்பெயர்ச்சி மழைக்காலங்களில் பாலியாறு பெருக்கெடுத்து கல்விளான் பகுதியிலுள்ள குடியிருப்புக்குள் வெள்ளம் உட்புகுவதால் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இந்தப் பாதிப்பை எதிர்கொள்வதால், அவர்களை வேறு இடங்களில் குடியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களை வேறு இடங்களில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, அவர்கள் ஏற்கனவே குடியிருக்கின்ற காணிகள் மற்றும் வீடுகளை பிரதேச செயலகம் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடாது. அந்தக் காணிகளையும், வீடுகளையும் தொடர்ந்து அவர்கள் பயன்படுத்த இடமளிக்கவேண்டும். கல்விளான் குடியிருப்பு அனர்த்த காலங்களில் குடியிருப்பதற்குப் பொருத்தமற்ற இடம் என்பதற்காகவே, வேறு இடங்களில் குடியேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் மக்களால் நடப்பட்ட நீண்டகாலப் பயிர்களும், பொருளாதார வளங்களும் ஆரம்ப இடத்திலேயே உள்ளன-என்றார். இதற்குப் பதிலளித்த துணுக்காய் பிரதேச செயலர், சுற்றறிக்கையின்படி அந்த மக்கள் ஏற்கனவே குடியிருக்கின்ற காணிகளிலுள்ள வீடுகள் இடித்தழிப்புச் செய்யப்படவேண்டும். மீண்டும் அந்த மக்கள் அங்கு குடியிருக்கமுடியாது. எனினும் தங்களது கோரிக்கையை ஏற்று எம்மால் அந்த வீடுகளை உடைப்பதற்கான அறிவுறுத்தல் வழங்கப்படாது. மக்கள் அந்த வீடுகளையும், காணிகளையும் பயன்படுத்தமுடியும். புதிதாக வழங்கப்படுகின்ற காணிகளுக்கு பிரதேச செயலகத்தால் எதிர்காலத்தில் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் பழைய வீட்டில் இருக்கும்போது அனர்த்தம் ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்பட்டால், அதற்குரிய நிவாரணங்கள் எவற்றையும் பெற்றுக்கொள்ளமுடியாது.- என்றார். (சு-246-பி)

# நீதிமன்ற சுதந்திரத்தில் தலையீடு கோத்தாபயவின் கதியே ஏற்படும்

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, மே 16

நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டு அனைத்தையும் செய்துவிடலாம் என்று நினைத்தால், அல்லது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியைக் கொண்டு அனைத்தையும் செய்ய முடியும் என்று நினைத்தால், அது ஒரு வரலாற்றுத் தவறாகும். நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறையின் ஆதிக்கத்திலிருந்து நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மேல் நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் திகதிகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டது நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் செயலாகும். சட்டத்தின் சமத்துவம் பற்றி பேசும் ஜனாதிபதி, மறுபுறம் நீதிமன்றத் தீர்ப்புகளை முன்கூட்டியே தீர்மானிக்கிறார். அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் காட்டி அனைத்தையும் செய்துவிடலாம் என நினைப்பது வரலாற்றுத் தவறு. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தும் கோத்தாபய ராஜபக்சவுக்கு என்ன நடந்தது என்பது உலகுக்கே தெரியும். பெரும்பான்மை பலம் என்பது நீதித்துறையைச் சிதைப்பதற்கான அதிகாரம் அல்ல. நீதிமன்றத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தவறும் அரசாங்கத்துக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கும் - என்றார். (ச-இ)

# ஒரு தரப்பின் இராஜதந்திர முடிவில் மத்தியஸ்த பேச்சு தோற்கிறது!

## எரிக் சொல்ஹெய்ம் பகிர்வு



கொழும்பு, மே 16

சமாதானத்தை விடப் போரில் ஈடுபடுவதே தமக்கு அதிக அரசியல் அல்லது இராணுவச் சாதகங்களை வழங்கும் என ஒரு தரப்பு நினைக்கும்போது அங்கு பேச்சுவார்த்தைகள் முறிவடைகின்றன என இலங்கைக்கான முன்னாள் சமாதானத்தூதுவரும், நோர்வே நாட்டு இராஜதந்திரியுமான எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் தொடக்கத்தை முன்னிட்டு தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரித்துள்ளதாவது - முடிவில்லாத போரைவிட, குழப்பமில்லாத சமரசம் மேலானதாகும். போர்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய மிக முக்கியமான பாடம் இதுவாகத்தான் இருக்கும். இலங்கையின் உள்நாட்டுப்போரில் தலையீடு செய்வதற்கு நோர்வேக்கு எந்தவொரு வெளிப்படையான காரணமும் இருக்கவில்லை. காலனித்துவ வரலாறு இல்லை. மூலோபாய நலன்கள் இல்லை. செல்வாக்குச் செலுத்துவதற்கான அதிகாரமும் இல்லை. ஆனால் இவ்விவகாரத்தில் ஒரு அமைதியான முடிவை எட்டுவதற்காக நாங்கள் சுமார் 10 ஆண்டுகளாக எமது வாழ்நாளின் பெரும் பகுதியை செலவிட்டோம். ஒரு அமைதிப்பேச்சுவார்த்தை என்பது மோசமான மத்தியஸ்தத்தினால் மாத்திரம் தோல்வியடைவதில்லை. மாறாக சமாதானத்தைவிட போரில் ஈடுபடுவதே தமக்குச் சாதகமாக அமையும் என ஒரு தரப்பு இராஜதந்திர ரீதியாக சிந்திக்கும் போது தான் அது தோல்வியடைகிறது. மத்தியஸ்தம் வகிப்பவரால் அதனை மீறிச் செயற்படமுடியாது - என்றார். (ச-இ)

# சுகாதார சேவை துறைக்குள் அரசியல் தலையீடு ஆபத்து


## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 16

நாட்டின் சுகாதாரச் சேவையை வலுப்படுத்துவதற்காக மாவட்ட ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக நியமிக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம், ஜனநாயகத்தின் அடிப்படைத் தூணான 'அதிகாரப் பகிர்வு' கோட்பாட்டைச் சிதைக்கும் செயல் என தினன தகுண கூட்டிணைவின் நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களான மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- சுகாதார ஒருங்கிணைப்புப் பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொள்வது, நிர்வாக ரீதியான தீர்மானமாக அன்றி, அரசியலமைப்பு ரீதியான அத்துமீறலாகவே பார்க்கப்படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணி சட்டங்களை உருவாக்குவதும் அரசாங்கத்தைக் கண்காணிப்பதுமே ஆகும்.

ஆனால், திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் வளங்களை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்று அதிகாரத்துக்கும் தொழில்சார் நிர்வாகிகளுக்கும் உரியவை. இன்று சுகாதாரத்துக்கு அரசியல்வாதிகளை நியமிக்கும் அரசாங்கம், நாளை பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள் என அனைத்து அரச நிறுவனங்களையும் அரசியல்வாதிகளின் மறைமுகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும். நாட்டின் தற்போதைய நிலைக்கு நிர்வாகக் கட்டமைப்புக்குள் அரசியல் ஊடுருவியதே காரணமாகும். அரச நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்படாமல், ஒவ்வொரு மட்டத்திலும் அரசியல்வாதிகள் தலையிடுவது விளைந்



# வாக்காளர் பட்டியல் திருத்தம் ஜூன் 1 வரை கால அவகாசம்!

கொழும்பு, மே 16

வாக்காளர் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள், உரிமைக்கோரல்கள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடைகின்றது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவற்றுப் பணிப்பாளர் ராஹேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையிலுள்ள வாக்காளர் பெயர்ப்பட்டியல், அதிலிருந்து நீக்கப்படவேண்டியவர்களின் பெயர்ப்பட்டியல், அதில் புதிதாக சேர்க்கப்படவேண்டியவர்களின் பெயர்ப்பட்டியல் ஆகியவற்றைச் சரிபார்த்து, ஏதேனும் ஒரு நபர் தனது பெயரோ அல்லது தனது குடும்ப உறுப்பினர்களின் பெயரோ அந்த ஆண்டிற்காக பரிந்துரைக்கப்படவில்லை எனத் தெரியவந்தால், அதற்கான உரிமைக்கோரல்களை முன்வைக்கமுடியும். வாக்காளர் பெயர்ப் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக மாவட்டத் தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம்,உள்ளூராட்சிமன்ற நிறுவனங்கள், கிராம உத்தியோகத்தர் அலுவலகம் ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்படும். அங்கு சென்று விபரங்களைச் சரிபார்த்து உரிமைக்கோரல்கள் அல்லது ஆட்சேபனைகளை முன்வைக்கமுடியும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை உங்கள் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.elections.gov.lk என்ற தளத்துக்குச் சென்றும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி விவரங்களைச் சரிபார்க்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# காலமும் கடமையும்..!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்திருக்கின்றது. நினைவு ஊர்தி, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல், அஞ்சலி நிகழ்வுகள் என்று தமிழர் தாயகமெங்கும் சோகத்தின் கீதங்கள் பரவத் தொடங்கியிருக்கின்றன. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் இதயத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட ஆத்மார்த்தமானதும் மிகக்கனதியானதுமான நாள்களில் தவிர்க்க முடியாத காலங்கள் இவை.


தமிழினப் படுகொலையின் இறுதி அஞ்சலிப்பு நிகழ்வுகள் வழக்கம்போல், முள்ளிவாய்க்கால் முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பதற்கு சகல ஏற்பாடுகளும் உரிய கட்டமைப்புக்கள் ஊடாக செய்யப்பட்டிருக்கின்றன. எனினும், தமிழினப் படுகொலையைப் பொறுத்தவரை ஓர் இனக் குழுமமாக எம்மால் செய்யக்கூடிய அல்லது செய்ய முடிந்த காரியங்கள் இவ்வளவும்தானா? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாக அமைகின்றது. இந்த அஞ்சலிப்புகள் அனைத்தும் எம்முடன் நின்றுவிடக்கூடாது. முள்ளிவாய்க்கால் அஞ்சலியையும், அதன் நினைவுகளையும் சமூகமயப் படுத்தப்பட வேண்டிய அடுத்த சந்ததிக்கு ஊடு கடத்த வேண்டிய பெரும்பொறுப்பு ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கட்சிக்கும், சமூகக் குழுக்களுக்கும், சிவில் சமூகச் செயற்பாட்டுத் தளங்களுக்கும் வலுவாக இருக்கவே செய்கின்றது. இந்த அஞ்சலி நிகழ்வுகள், கிராமங்கள் தோறும் எவ்வளவுக்கு எவ்வளவு விரிவாக்கப்படுகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு நீதிக்கான பாதையை அகலத் திறக்கும். ஆதலால், இந்த வாரத்துக்குரிய தாற்பரியத்தை உணர்ந்து ஆத்மத்தில் இருத்தி செயற்பட வேண்டியது எம் அனைவரினதும் தேசியக் கடமையாகும்.

ஆதலால், ஒவ்வொரு வருடமும் நீதியை மன்றாட்டமாகத் தேடும் இனக் குழுமமாகத்தான் இந்த அஞ்சலிப்புக்களை நாம் மேற்கொள்ளப் போகின்றோமா? என்ற சுய பரிசீலனையில் நாங்கள் ஈடுபட வேண்டும். இலங்கையில் இறுதிப்போரின் போது தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர், தமிழர்கள் மீது வகைதொகையின்றிப் போர்க்குற்றங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன என்று வெளிப்படையாக ஏற்றிருக்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. ஆனால், தமிழர்கள் மீதான இந்தப் படுகொலைகளுக்கு என்ன நீதியை ஐக்கிய நாடுகள் சபை வழங்கிவிட்டது? ஒன்றரைத் தசாப்தம் கடந்த பின்னரும்கூட நீதியை நிலைநாட்டி ஆறாத ரணத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு கொஞ்சமேனும் மருந்திடுவதற்கு என்ன பொறிமுறைகளை ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கியுள்ளது? ஐக்கிய நாடுகள் சபையின் செயலற்ற தன்மைக்கு ஈழத் தமிழினம் ஓரணியில் நின்று வலுவான அழுத்தத்தை வழங்காதமையும் ஒரு காரணம் என்றால் அதை மறுப்பதற்கில்லை.

தமிழினப் படுகொலைகள் தொடர்பான அஞ்சலிப்பு என்பது இலையுதிர்காலம், வசந்தகாலம் போன்ற பருவகாலச் சுழற்சிச் செயற்பாடு அல்ல. இறுக்கமான கட்டமைப்புகள் மூலம் வருடம் முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் நகர்வுகள் மூலமே எமக்கான தீர்வை அடுத்த கட்டத்துக்கு உந்தித் தள்ளமுடியும். அதில் நாம் தோற்றுப் போய்விட்டோம் அல்லது தோல்வியின் விளிம்பில் நிற்கின்றோம் என்பதே கசப்பான உண்மை. எனவே, இக்காலத்தில் எமது மனங்களில் பற்றியெரியும் கனலை, வருடம் முழுவதும் சுடர்விடச் செய்ய வேண்டும் - அதை மிகவும் அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : adv






## பொய்யாமொழி

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்ப படும்**

**பொருள்:** நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சிநிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.




# முன்னேற்றம் கண்ட பயனாளிகளை அஸ்வெசுமவில் விடுவிக்கத் திட்டம்!



கொழும்பு, மே 16

**அஸ்வெசும பயனாளிகளில் வாழ்வாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ள குடும்பங்களை இனங்கண்டு, அவர்களை அடுத்த 3 ஆண்டுகளுக்குள் படிப்படியாகத் திட்டத்திலிருந்து விடுவிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பல்வேறு சுயதொழில் முயற்சிகள், நிதி உதவிகள், தொழிற்பயிற்சி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் தற்போது சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் நிலையான வருமானத்தைப் பெறத் தொடங்கியுள்ளன. இவர்களை உடனடியாகத் திட்டத்திலிருந்து நீக்காமல், எதிர்வரும் 2027 முதல் 2029 வரை படிப்படியாக விடுவிப்பதே அரசாங்கத்தின் இலக்காகும்.

மக்கள் அரசாங்கத்தின் உதவிகளில் மட்டும் தங்கியிருக்காமல், சொந்தக் காலில் நிற்பதை ஊக்கப்படுத்துவதே இதன் நோக்கம். ஐ.எம்.எப். ஒப்பந்தப்படி சில கொடுப்பனவுகளை நிறுத்த வேண்டிய காலக்கெடு இருந்தாலும், மக்களின் வாழ்வாதாரம் முழுமையாக வலுப்படும் வரை அவசரப்பட்டு எவரையும் நீக்கப்போவதில்லை. சில பயனாளிகள் உதவித்தொகையை அத்தியாவசியமற்ற விடயங்களுக்குச் செலவிடுவதாகக் குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளன. இதுகுறித்து அவதானம் செலுத்தப்படும்-என்றார். (ச-இ)

## இலங்கை – ஓமான் குழுவினர் சந்திப்பு

கொழும்பு, மே 16

இலங்கை மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு இடையில் கடற்றொழில் மற்றும் கடல் வளங்கள் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஓமான் நாட்டின் உயர்மட்டக் கைத்தொழில் தூதுக்குழுவிற்கும் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முற்பகல் அமைச்சின் வளாகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலைத் தொடர்ந்து, ஓமான் தூதுக்குழுவினர் இலங்கையில் நிலவும் முதலீட்டுத் திறன்களை நேரடியாக ஆய்வு செய்வதற்காக விசேட கள விஜயங்களில் ஈடுபட்டனர். (எ-இ)

# டொலர் விலை உச்சம்; பெறுமதி சரிந்த ரூபா



கொழும்பு, மே 16

இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராகத் தொடர்ந்து வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது. நேற்றைய நிலைவரப்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 329 ரூபா 92 சதமாக அதிகரித்துள்ளது. 2026 ஜனவரி முதல் மே 8 வரையான குறுகிய காலப்பகுதியில் மட்டும் ரூபாவின் பெறுமதி 3.6 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதுதொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளதாவது-

இந்த வருடம் இலங்கை ரூபா மட்டுமன்றி ஏனைய நாடுகளின் நாணயங்களும் சரிவடைந்து, அமெரிக்க டொலர் வலுவடைந்துள்ளது. இதற்கு உலகளாவிய நிச்சயமற்ற தன்மையே பிரதான காரணமாகும். எண்ணெய் மற்றும் கப்பல் போக்குவரத்து, மசகு எண்ணெய் சந்தையின் நிலையற்ற தன்மை மற்றும் கப்பல் கட்டணங்கள் அதிகரிப்பு என்பன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகரிப்பதற்கும், ஏற்றுமதி வருமானம் உயர்வதற்கும் இது வழிவகுக்கும். இருப்பினும், கடன்களை மீளச் செலுத்தும்போது ரூபாவின் பெறுமதி சரிவு நாட்டுக்குப் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார். (ச-இ)

## இலங்கை– இந்திய மீனவர் விவகாரம்; விஜயை சந்திக்கும் அமைச்சர் குழு

கிளிநொச்சி, மே 16

இலங்கை-இந்திய மீனவர்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் தொடர்பில், தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சர் விஜயை, மீன்பிடி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சந்திக்கவுள்ளனர். இதுதொடர்பில் அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:-

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் தடைசெய்யப்பட்ட இழுவைமடிப் படகுகளைப் பயன்படுத்தி, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் மீன்பிடியில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இந்திய-இலங்கை மீனவர்கள் விடயம் தொடர்பாக மிக விரைவில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜயை நேரடியாகச் சந்தித்து, இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு, உரிய தீர்வைப் பெற்றுகொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (க-113)

நாளை ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 3
17.05.2026
சுபநேரம் : 08.53 - 10.23
ராகுகாலம் : 04.23 - 05.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# 2026 LG INNOFEST நிகழ்வில், ஆசியபசிபிக் பிராந்தியத்திற்கான புதுமையான வளர்ச்சி உத்திகளை LG ELECTRONICS அறிமுகம் செய்துள்ளது. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் AI தொழில்நுட்பத்தில் இயங்கும் சமையலறை மற்றும் சலவை அறைத் தீர்வுகளை LG ELECTRONICS வழங்கியுள்ளது




ஆசியா பசிபிக் பிராந்தியத்தின் 2026 LG InnoFest கண்காட்சி, ஏப்ரல் 07 முதல் 10 வரை தென்கொரியாவின் Busan நகரில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், வணிக கூட்டாண்மைகளை வலுப்படுத்தும் நோக்கில் ஆசியா பசிபிக் பிராந்தியத்தின் சுமார் 20 நாடுகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட துணையாளர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

'Innovation, Forward Together' என்ற தலைப்பின்கீழ், ஆசிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய நவீன LG தயாரிப்புகள் பல அறிமுகப்படுத்தப்பட்டன. பல்வேறு தன்மைகள் கொண்ட ஆசிய சந்தையின் தேவைகளை நுணுக்கமாக புரிந்து கொண்டு, புதுமையான தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்ட, உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த தயாரிப்புகள் இங்கு வெளியிடப்பட்டன.

**புதிய மாதிரியின் சலவைத் தீர்வுகள்**

LG சலவைத் தயாரிப்புகளை மேலும் விரிவுபடுத்தி, புதிய WASH TOWER மாடல்களை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. ஆசிய வீடுகளுக்கு ஏற்றவாறு 25 அங்குலம், 24 அங்குலம் மற்றும் 27 அங்குலம் போன்ற மாடல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை இடத்தை மிச்சப்படுத்தும்வகையிலும், தினசரி வாழ்க்கையை எளிதாக்கும்வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

புதிய TOP LOADING மாடல்கள் Artificial Intelligence Direct Drive (AI DD) தொழில்நுட்பத்துடன் வருகிறது. இது துணிகளின் தன்மைக்கு ஏற்ப துவைக்கும் இயக்கத்தை வழங்கி, பாதுகாப்பான மற்றும் திறமையான சலவையை உறுதி செய்கிறது. TurboWash 3D தொழில்நுட்பம் மூலம் 30 நிமிடங்களுக்குள் முழுமையான சலவையை பெறலாம். மேலும், தானியங்கி டிஸ்பென்சர் ஒவ்வொரு சலவைக்கும் தேவையான சலவைத் தூள் அளவை தானாக வழங்குவதால், அடிக்கடி நிரப்பவேண்டிய அவசியம் இல்லை.

புதிய LG WashCombo மூலம் துணிகளை உலர்த்துவது மேலும் எளிதாக்குகிறது. Inverter HeatPump தொழில்நுட்பம் இதை அதிக செயற்றிறன் மற்றும் நிலைத்தன்மையுடன் செய்கிறது. ஆசிய வாடிக்கையாளர்கள் அதிக கவனம் செலுத்தும் மின்சாரச் செலவைக் கருத்திற்கொண்டு, மின்சார சேமிப்பை உறுதி செய்யும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

வணிக அளவிலான சலவைகளுக்கு, நீண்ட நேரம் இயங்கக் கூடிய மற்றும் பெரிய அளவு ஆடைகளை திறம்பட சலவை செய்யக்கூடிய தயாரிப்புகளையும் LG அறிமுகப்படுத்தியுள்ளது. இவை CUSTOMIZABLE WASH PROGRAMS, OPEN API CONNECTIVITY மற்றும் முன்னிருந்து எளிதாக பயன்படுத்தக் கூடிய வடிவமைப்புடன்வருகிறது. புதிய COMMERCIAL WASHER- DRYER HEATPUMP COMBO ஒரே இயந்திரத்தில் துவைக்கும் மற்றும் உலர்த்தும் வசதியை வழங்கி, இடத்தை மிச்சப்படுத்துகிறது. கொரியாவில் அதிக தேவை இருப்பதால், இது உலகளாவிய அளவில் விரிவுபடுத்தப்படுகிறது.

**தினசரி வாழ்க்கைக்கு ஸ்மார்ட் சமையலறைத் தீர்வுகள்**

ஆசிய வீடுகளுக்கு ஏற்றவகையில் புதிய குளிர்சாதனப் பெட்டிகளின் மாதிரிகளை LG அறிமுகப்படுத்தியுள்ளது. குறைந்த இடத்தில் அதிக சேமிப்பு திறனை வழங்கும்வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. அதிக ஐஸ் தேவைக்கு ஏற்ப CRAFT ICE, CRUSHED ICE, CUBED ICE மற்றும் MINI CRAFT போன்ற பல்வேறு ஐஸ் தயாரிப்பு வசதிகள் இதில் உள்ளன.

புதிய LG DISHWASHER ஒரு மணி நேரத்தில் WASH - AND- DRY CYCLE வழங்குகிறது. QUADWASH PRO தொழில்நுட்பம் நான்கு SPRAY ARMS மூலம் அதிக அழுத்த நீர்த்துளிகள் மற்றும் மைக்ரோ பபிள்ஸ் மூலம் பாத்திரங்களை முழுமையாக சுத்தம் செய்கிறது. DYNAMIC HEAT DRY+ தொழில்நுட்பம் ஈரப்பதத்தை நீக்கி, சூடான காற்றின் மூலம் விரைவாக உலர்த்துகிறது. பல மாடல்கள் A-GRADE மின்சாரத்திறனுடன் வருகிறது.

தென் கிழக்கு ஆசிய சந்தைக்கு ஏற்ற BUILT- IN KITCHEN தயாரிப்புகளாக OVEN, COOKTOP மற்றும் HOOD ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. OVENகளில் உள்ள மேம்பட்ட கேமராக்கள் மூலம் உணவு சமைக்கும் நிலையை நேரடியாகக் கண்காணிக்க முடிகிறது.

**சிறப்பான கண்காட்சி அனுபவம்**

2026 INNOFEST கண்காட்சியில், முதல் முறையாக LG,தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை பங்காளர்களுடன் இணைந்து, INTERACTIVE SALES சூழலில் நேரடி அமர்வுகளை நடத்தியது. பங்கேற்பாளர்கள் ஆசியாவின் பல்வேறு வீட்டு சூழல்களை அனுபவிக்க பல்வேறு கண்காட்சிப் பகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன.
இந்தப் பகுதிகள் மூலம், LG தனது AI தொழில்நுட்பத்தின் மூலம் வீட்டு வேலைகளை எளிதாக்கும் எதிர்காலக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியது. AI HOME HUB மற்றும் THINQON மூலம் LG சாதனங்கள் மற்றும் IOT உபகரணங்கள் வீட்டு செயற்பாடுகளை மேலும் சீராகவும் எளிதாகவும் மாற்றுகின்றன. THINQ ON ஏற்கனவே சந்தையில் அறிமுகமாகி, ஆஸ்திரேலியா மற்றும்தாய்லாந்துஉள்ளிட்டநாடுகளுக்குவிரிவுபடுத்தப்பட்டுள்ளது.
LG ELECTRONICS நிறுவனத்தின் ஆசிய பிராந்திய நீண்டகால வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வீட்டு மின்சாதனங்கள் உலகளாவிய அளவில் விரிவுபடுத்தப்பட்டு, மலேசியா, தாய்லாந்து, தைவான், சிங்கப்புர் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளில் வாடிக்கையாளர்களை கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ளது.

2026 INNI FEST நிகழ்வின்போது, தனது கூட்டாளர்களுடன் இணைந்து, ஆசியா மிகவும் முக்கியமான மற்றும் செயற்றிறன் மிக்க சந்தை என்பதை வலியுறுத்த முடிந்தது என்று LG ELECTRONICS ஆசியா-பசிபிக் பிராந்திய CEO JAESEUNG KIM தெரிவித்துள்ளார். AI தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் தயாரிப்புகள் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த LG தொடர்ந்து உறுதியாக செயற்பட்டுவருகிறது.

**LG ELECTRONICS HOME APPLIACE SOLUTION நிறுவனம்**

LG HOME APPLIANCE SOLUTION (HS) நிறுவனம் உலகளாவிய அளவில் வீட்டு மின்சாதனங்கள் மற்றும் AI HOME தீர்வுகளில் முன்னணி நிறுவனமாக செயற்படுகிறது. துறையின் முன்னோடியான நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மனிதர்களின் தினசரி வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக LLG HOME APPLIANCE SOLUTION தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.
அதிக திறன் மற்றும் எளிதான பயன்பாட்டை வழங்கும் சமையலறை உபகரணங்கள் மற்றும் வீட்டு மின்சாதனங்களை பல்வேறு வகைகளில் அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், தற்போதைய நிலையில் ரோபோ தொழில்நுட்பத்துடன் கூடிய வீட்டு மின்சாதனங்களை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகிறது.

இந்த அனைத்துத் தயாரிப்புகளும் சுகவசதி, மேம்பட்ட தரம் மற்றும் சிறந்த செயற்றிறன் ஆகியவற்றை இணைத்து, பயனர்களுக்கு நிலையான மற்றும் நவீன வாழ்க்கை முறையை வழங்குகின்றன.LG பற்றி மேலும் அறிய WWW.LG.com/global/newsroom இணையதளத்தைப் பார்வையிடுங்கள்.

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக் கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில்உற்சாகமான நிலையேகாணப்படும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கன்னி:** ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவிகிடைக்கும். தந்தையின்தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையு டன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பேசாலை மருத்துவமனைக்கு விரைவில் குடிதண்ணீர் வசதி



**மன்னார், மே 16**

**பேசாலை பிரதேச மருத்துவமனையில், நீண்ட காலமாக நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில், மருத்துவமனையில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவத் தொடங்கியதும், இயந்திர வடிகட்டல் பிளான்ட் அமைக்கப்பட்டு தற்காலிகமாக குடிதண்ணீர் விநியோகிக்கப் பட்டது.

எனினும் நிரந்தரத் தீர்வாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம்,நீரிணைப்பு வழங்கப்படவேண்டிய அவசியம் உள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அதிகாரி, மருத்துவமனைக்கு விரைவில் நீர் விநியோகிக்கப்படும்-என்றார். (க-60பி)



## தேயிலைத் தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியத்திட்டம் அறிமுகம்

கொழும்பு,மே 16

தேயிலைத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காக புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயக் காப்புறுதிச் சபை அறிவித்துள்ளது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டம், விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை மற்றும் தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு ஆகியவற்றின் கூட்டுப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் இதில் இணைந்துகொள்ளத் தகுதி பெறுவார்கள். பங்களிப்பாளர்கள் தங்களது நிதித் திறனுக்கு ஏற்ப காப்பீட்டுத் தவணைத் தொகைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

தேயிலைத் துறைத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்வதற்கான உடல் வலிமையை இழந்திருக்கும் முதிய வயதில், அவர்களது சமூகப் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதே இந்த காப்புறுதித் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## முதியோர் கொடுப்பனவு நேரடியாக இனி வங்கிக்கு!

யாழ்ப்பாணம், மே 16

இதுவரை காலமும் அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக முதியோர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்தக் கொடுப்பனவு, நலன்புரி நன்மைகள் சபையின் சமூகத் தரவுப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளின் வங்கிக்கணக்குகளுக்கு இனி நேரடியாக வைப்பிலிடப்படும் முதியோர் தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் இந்த மாற்றம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கொடுப்பனவுகளைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்கவும், வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை வங்கிக் கணக்கு இல்லாத முதியோர் கொடுப்பனவு பெறுபவர்கள், தமக்கு அருகிலுள்ள ஏதேனும் ஒரு வங்கியில் புதிய கணக்கை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கின் விவரங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களில் உள்ள முதியோர் அபிவிருத்தி அலகில் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## முல்லைத்தீவு மருத்துவமனையில் நவீன 4 மாடி மருத்துவ விடுதி

### பணிகள் ஆரம்பம்

கொழும்பு, மே 16

இந்திய அரசாங்கத்தின் 600 மில்லியன் இலங்கை ரூபா நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன நான்கு மாடி மருத்துவ விடுதி வளாகத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் இந்திய துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் இலங்கை வந்தபோது கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

புதிய நான்கு மாடி வளாகத்தில் நோயாளர்களின் வசதிக்காக உயிர் காக்கும் உபகரணங்கள், குளிரூட்டி முறைமைகள், தீயணைப்பு பொறிமுறைகள் மற்றும் யுபிஎஸ் முறைமை, தீ பாதுகாப்பு மற்றும் குழாய் மூலமாக மருத்துவ வாயு விநியோக முறை உள்ளிட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்பு நவீன வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.


இந்தத் திட்டம் நிறைவடையும் நிலையில் இம் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் உள்நோயாளர்களின் எண்ணிக்கை 150 வீதத்தால் அதிகரிக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் மூலமாக மாவட்டத்தின் சுகாதார பராமரிப்பு நடவடிக்கைகள் மேம்படவுள்ளன.

இதேவேளை இந்தியாவின் 'உயர் பெறுபேற்றினைக் கொண்ட சமூக அபிவிருத்தி திட்டங்கள்' என்பதன் கீழ், இலங்கையின் 25 மாவட்டங்களிலும் வீடமைப்பு, கல்வி, போக்குவரத்து மற்றும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 18 திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-இ)

## கொன்ஸ்டபிள்கள் பணி இடைநீக்கம்

கொழும்பு, மே 6

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களை வைத்திருப்பதற்கு அனுமதி அளித்த சம்பவம் தொடர்பாக, மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவில் பணியாற்றும் இரு பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சிறைக்கூண்டுகளில் அடைக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்கள் ஹெரோயின் போதைப்பொருள், சிகரெட், லைட்டர்கள் மற்றும் புகையிலை துண்டுகளை வைத்திருப்பதற்கு இவர்கள் இடமளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)




## முள்ளிவாய்க்கால் வாரத்தில் சந்நிதியில் ஆத்மசாந்தி பூசை

யாழ்ப்பாணம், மே 16

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இறுதிப்போரில் உயிர் இழந்த மக்களுக்காக தொண்டைமானாறு செல்வ சந்நிதி ஆலயத்தில் விசேட ஆத்ம சாந்தி பூஜை வழிபாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமைஆரம்பமாகின.

அதைத் தொடர்ந்து இறுதிப்போர் அவலத்தை குறிக்கும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் தயாபரன் அவர்களும் உறுப்பினர் நிலாங்கதன், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

16.05.2026 சனிக்கிழமை

**பணியாளர் தேவை**

சாவகச்சேரியில் இயங்கும்
சிற்றுண்டி நிலையத்திற்கு
பணியாளர் தேவை.


**075 130 6392**

# ரயில் பெட்டிக்குள் ஆறு சடலங்கள்!

டெக்சாஸ், மே 16

அமெரிக்கா மெக்சிக்கோ எல்லைக்கருகில் டெக்சாஸ் மாநிலத்தின் லாரெடோ நகரில் ரெயில்வே யார்ட் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த சரக்கு ரயில் பெட்டியொன்றில் 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் மெக்சிகோவிலிருந்து சட்டவிரோதமாக எல்லைத் தாண்ட முயன்றபோது வெப்பம் அல்லது மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஏ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 22.10.1941 மறைவு 14.05.2026

## ஆறுமுகம் நவரத்தினம்

கெருடாவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் "மிதிலை" தாவடி கிழக்கு பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நவரத்தினம் 14.05.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் நிர்மலானந்தன் (மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் - நல்லூர்), ஜெகானந்தன் (ஆசிரியர் - யா / புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), கலைவாணி (ஆசிரியர் - யா / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), மயூரன் (கமலநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநலசேவை நிலையம் சண்டிலிப்பாய்), சிவகௌரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலினி (ஆசிரியர் - வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்), மலர்விழி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண சுகாதார திணைக்களம் வடமாகாணம்), அன்பழகன் (ஸ்ரீலங்கா ரெலிகொம் மேற்பார்வை உத்தியோகத்தர்), செல்வதர்சினி (ஆசிரியை - மயிலணி சைவ மகா வித்தியாலயம்), ஜெயப்பிரகாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, இராஜேஸ்வரி, நடராசா மற்றும் தனேஸ்வரி, மகேஸ்வரி, இராணியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், துஷ்யந்தன், துவாரகன், ஜதுஷனா, சந்தோஷ், அக்ஷனா, அக்சயன், ஆதிக்ஷனா, அக்ஷித்யா, அமிர்தன், அபிராமி, ஜெனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 070 679 0879, 077 617 1514
077 424 6311, 077 942 0524

(cs 61438) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 01 • 03 • 1936



விண்ணில் 16 • 04 • 2026

## அமரர் திருமதி சோதிப்பிள்ளை பாலசிங்கம்

பாசச் சிறுகூட்டில்
பக்குவமாய் எம்மை வைத்து
நேசக் கதைகள் சொல்லி
நெறி தவறா வழிகள் காட்டி
ஆசையுடன் வளர்த்து எமை
ஆளாக்கி வைத்த தாயே
ஏன் பிரிந்தாய் அம்மா?
எம்மை விட்டு ஏன் பிரிந்தாய்?
நீயில்லா இடமிங்கு என்றும்
நிரந்தர வெறுமையாச்சு
நெஞ்சம் கனக்கிறது அம்மா
நீண்ட துயர் தொடர்கிறது
ஆனாலும் வாழ்கின்றோம்
அம்மா உன் ஆசியுடன்
ஓம் சாந்தி

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.05.2026) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்தி வழிபாட்டிலும் மதியபோசன நிகழ்விலும் தனிப்பட்ட அழைப்பாக கருதி கலந்துகொள்ளுமாறு உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

36/12, பீ.ஏ.தம்பி ஒழுங்கை,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(cs 31804) (N-1)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 • 12 • 1940



இறப்பு 13 • 05 • 2026

## கந்தசாமி நாகம்மா

மறவன்புலோ மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நாகம்மா அவர்கள் 13.05.2026 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிய ரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தின சபாபதியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சீதாதேவி, காலஞ்சென்ற கனகம்மா ஆகியோரின் மைத்துனியும், தயாசீலன், சத்தியசீலன், தர்மசீலன், இந்திரமதி, காலஞ்சென்ற கலாமதி, காலஞ்சென்ற குணசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமங்கலி, கமலினி, மணிவண்ணன், கிருஷ்ணகுமாரி, பிரபோதினி, சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமியும், உமைந்தன், வேந்தன், ருந்ரா, சஜீவன், சரண்ஜீவன், மதிவதனி, தமயந்தி, சிந்துஜன், ஜெசாந், அக்ஷனா, லக்ஷன், சைறிக்கா,டிசூரிக்கா, மிசானிக்கா, பவித்ரன், இந்துஜன், நிந்துஜா, சனோசா, கஜேந்திரன், நிரூபனா, தவிந்தினி, சேயோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எய்ரா, தீரா, நிதாரா, அகனியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2026) ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - சத்தியசீலன்
மருமகள் - இந்து } 077 662 1048

(cs 61439) N

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நில மீட்புக்கான ஒருங்கிணைவு கேப்பாப்பிலவில் மக்கள் சந்திப்பு

முல்லைத்தீவு,மே 16

கிழக்கு மாகாண நில மீட்பு வலையமைப்பினரின் ஏற்பாட்டில், நில மீட்புக்கான ஒன்றிணைவு தொடர்பான மக்கள் சந்திப்பு, கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. சந்திப்பில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நில உரிமைக்காக செயற்பட்டுவரும் செயற்பாட்டாளர்கள், முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு, கொக்குத்தொடுவாய், வாட்டுவாகல் மற்றும் வற்றாப்பளைப் பகுதிகளைச் சேர்ந்த நில அபகரிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் பங்கேற்றனர். சந்திப்பில் நில மீட்புக்காக வடக்கு, கிழக்கை இணைக்கும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் அவசியம், முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர்மலை விவகாரம், கொக்கிளாய் மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளில் இடம்பெறும் நில அபகரிப்பு, கேப்பாப்பிலவு மக்களின் காணி மீட்புப் போராட்டம், வட்டுவாகல் கோத்தாபய கடற்படை முகாம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விரிவான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. (க-19-பி)



சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா கடந்த புதன்கிழமை இரவு பக்திபூர்வமாக நடைபெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய சப்பறத்தில் அடியவர்கள் சூழக் கதிரமலைச் சிவன் வீதி வலம் வந்தார். (எ-41-66)



# ஓட்டோச் சங்கத்தினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி

கிளிநொச்சி, மே 16


கிளிநொச்சி முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தால், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவனை முன்பாகடந்த புதன்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. நிகழ்வின் ஆரம்பத்தில், இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. (க-55,113-பி)

# கூட்டுறவு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு

கிளிநொச்சி, மே 16

இலங்கையில் லஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான செயற்றிட்டம் தொடர்பில், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு, கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் அகல்யா செகராஜா தலைமையில் நடைபெற்ற செயலமர்வில், வளவாளராக லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் உதவிப்பணிப்பாளர் (சட்டம்)சால்தீன் எம்.சப்ரி கலந்துகொண்டார்.(க-113பி)





பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் தற்போதைய நிலைமைகளை, நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி நேரில் சென்று ஆராய்ந்தார்.(க)



# இரா.நிஷாந்தனின் நயம்பேசு நூல் வெளியீடு

கிளிநொச்சி, மே 16

வட்டக்கச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய தமிழாசிரியர் இரா. நிஷாந்தன் எழுதிய, 50 இலக்கியக் கட்டுரைகளைக் கொண்ட நயம் பேசு என்ற நூலின் வெளியீட்டு விழா, கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வெளியீட்டுரையை கவிஞர் சர்வேஸ்வரன் வில்வரசனும், நயப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கவிஞர் வேல். நந்தகுமாரும் ஆற்றினர்.

தென்கருணையூர் அமிர்த ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த இலக்கிய நூலில் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாரதியார் பாடல்கள் உள்ளிட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலக்கியப் பகுதிகளில் இருந்து 50 கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார முன்னேற்றத்துக்கு இலங்கைக்குத் தொடர் ஆதரவு!

## ஐ.எம்.எப். தெரிவிப்பு




**வொஷிங்டன், மே 16**

**இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பு தொடர்ந்து வழங்கப்படும் என்று சர்வதேச நாணயநிதியம் மீண்டும் உறுதியளித்துள்ளது.**

வொஷிங்டனில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் சர்வதேச நாணயநிதியத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளதாவது-

இயற்கை அனர்த்தம் மற்றும் உலகளாவிய சவால்களை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரச் செயற்பாடு முன்னேற்றமடைந்து வருகின்றது.

'டித்வா' இயற்கை அனர்த்தம் இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச ரீதியாக நிலவும் போர்ச் சூழல், எரிபொருள் விலை மற்றும் விநியோகச்சங்கிலியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் இலங்கையின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதித்துள்ளது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும், இலங்கையின் மக்களும் பொருளாதாரமும் கொண்டுள்ள 'விதிவிலக்கான மீளெழும் திறன்' வியக்கத்தக்கது.

சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் சீர்திருத்த வேலைத்திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் தற்போது பலன் அளிக்கத் தொடங்கியுள்ளன. அதிகாரிகளின் வலுவான அர்ப்பணிப்பு காரணமாக இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடு மேம்பட்டு வருகின்றது. இலங்கை அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருவதுடன், இலங்கைக்கு ஆதரவளிப்பதில் சர்வதேச நாணயநிதியம் தொடர்ந்தும் உறுதியுடன் இருக்கின்றது- என்றார். (ச-இ)

# ஜகத் சமந்தவுக்கு சிறைத்தண்டனை

கொழும்பு, மே 16

ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாகக் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆராச்சிக்கட்டுவ பிரதேசசபையின் முன்னாள் தலைவர் ஜகத் சமந்தவுக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்குள்ளான பிரதேச செயலாளருக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈடு செலுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக சனத் நிஷாந்த மற்றும் அவரது சகோதரருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. சனத் நிஷாந்த 2024ஆம் ஆண்டு கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தமையால், நேற்று நீதிமன்றத்தில் அவரது சகோதரர் ஜகத் சமந்த மாத்திரமே முன்னிலையாகியிருந்தார். சாட்சியங்கள் மற்றும் விடயங்களை ஆராய்ந்த பின்னர் இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கிவரும் பல சரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டு கீழ்காணும் ஆட்கள் தேவை.

- Manager (2 வருட அனுபவம்)
- Administtration
- Computer Billing + Cashier
- Sale Assistants (Boy + Girl)
- Part Time (5.00pm to 10.00pm

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(CS/31808) J-1

தொடர்புகளுக்கு:-

077 230 6737, 077 419 5015

# மின்சாரக் கட்டணத்தை ஜூலையில் குறையுங்கள்

## பாவனையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 16

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால் நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், மின்சாரக் கட்டணக் குறைப்பைத் தள்ளிப்போடுவது முறையற்றது. எனவே மின்சாரக் கட்டணக் குறைப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை தாமதப்படுத்தாமல், ஜூலை மாதத்திலேயே அதற்கான மக்கள் கருத்துக்கணிப்பை நடத்தி உடனடியாகக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்று மின்சாரப் பாவனையாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இதுதொடர்பாக மின்சாரப் பாவனையாளர் சங்கத்தின் தலைவர் எம்.டி.ஆர். அதுல தெரிவித்துள்ளதாவது-

ஒரு லீற்றர் டீசலுக்கு 720 ரூபா செலவாவதாக ஜனாதிபதி கூறியுள்ள புள்ளிவிவரம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதியால் நுரைச்சோலை மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறை மறைக்கவும், அனல் மின் நிலையங்களுக்கு டீசல் பயன்படுத்துவதைத் நியாயப்படுத்தவுமே மக்கள் மீது ஜனாதிபதி பழிபோடுகிறார்.

தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு இலாபம் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே தற்போதைய தரவுகள் திரிக்கப்படுகின்றன. நாட்டில் தற்போது நிலவும் கடும் மழை காரணமாக நீர் மின் நிலையங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. மிகக் குறைந்த செலவில் மின்சாரம் தயாரிக்கமுடியும் என்பதால் செப்ரெம்பர் வரை காத்திருக்கத் தேவையில்லை. செப்ரெம்பர் வரை தாமதிப்பது மின்சார சபை பில்லியன் கணக்கில் மேலதிக இலாபத்தை ஈட்டவே வழிவகுக்கும், இதனால் சுமை மக்கள் மீதே சுமத்தப்படும். பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு உடனடியாகத் தலையிட்டு, ஜூலை மாதத்தில் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்தி, கட்டணக் குறைப்பை நடைமுறைப்படுத்தவேண்டும்- என்றார். (ச-இ)

# காணி, பொலிஸ் அதிகாரமற்ற அதிகாரப்பகிர்வுக்குத் தயாராம்!

## பெரமுன தெரிவிப்பு

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து, ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணங்களுக்குப் பகிர் வதில் தமக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை என பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளதாவது-

மாகாணசபைத் தேர்தல் முறைமை மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனும் வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயாராக இருக்கின்றோம். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து, ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணங்களுக்குப் பகிர்வதில் தமக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது நாட்டில் தேவையற்ற மோதல்களையும் பிரச்சினைகளையுமே உருவாக்கும். 2017ஆம் ஆண்டு எல்லை நிர்ணய அறிக்கையைப் பயன்படுத்தி, மாகாணசபைத் தேர்தலை நல்லாட்சி அரசாங்கம் காலவரையறையின்றிப் பிற்போட்டுள்ளது. தற்போது மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையின்கீழ் நடத்துவது என்பது தொடர்பில் ஆராய நாடாளுமன்ற விசேட செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் குழு 3 மாத காலத்துக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்பது சந்தேகத்துக்குரியது - என்றார். (ச-இ)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

மலேசியாவில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கும், 68 வயது நிரம்பிய தாய் ஒருவரை பராமரிப்பதற்கும் 30 - 45 வயதிற்கு இடைப்பட்ட பொருத்தமான பணிப்பெண் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும். விசா ஒழுங்குகள், சம்பளம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

சி. ஆரூரன் :- +94 756 458 817
தி.ஜெயசீலா :- +44 795 748 6992
(பகிரி மட்டும்/ Whatsapp)

CS/61373) J-1

**நீங்கா நினைவுகளில்**

17ஆம் ஆண்டு | 34ஆம் ஆண்டு

மலர்வு 25.04.1984 | மலர்வு 11.03.1972





உதிர்வு 16.05.2009 | உதிர்வு 28.08.1992

கதிர்காமவேலன் ஹரிதாஸ் | கதிர்காமவேலன் சிறிகாந்தன்

வீட்டு வாசலில் உங்கள் நிழல் தேடுகிறோம்,
விழிகளின் ஓரத்தில் கண்ணீரை மறைக்கிறோம்,
சிரித்த முகங்கள் கண்முன் நிற்கின்றன,
பேசிய வார்த்தைகள் காதோரம் ஒலிக்கின்றன,
சென்றுவிட்டீர்கள் என்று மனம் ஏற்கவில்லை,
நினைவுகளோ இன்னும் உயிராய் வாழ்கின்றன

என்றும் உங்கள் பிரிவுத்துயரால் வாடும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

(CR/47546) J-J

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாகாணத்...

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

மாகாணசபைத் தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் தயாராகவே உள்ளோம். இந்த ஆண்டின் இறுதிக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும். எனினும், தேர்தல் நடத்தப்படும் திகதி தொடர்பில் உறுதியாகக் கூறமுடியாத நிலையே தற்போது காணப்படுகின்றது. பொதுமக்களின் ஆதரவு அரசாங்கத்துக்கு உள்ளது என்பதால் தேர்தலை நடத்திமுடிக்கும் நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் எக்காலத்திலும் மாறாது - என்றார். (அ-ம)

### ஆசிரிய...

வடமாகாணத்திலுள்ள அதிகாரிகளால் இடமாற்றச் சபையை மீறி ஆசிரிய இடமாற்றம் வழங்கப்பட்டமையைக் கண்டித்து, வடமாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு முன்பாக கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரிய சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தாவது:-

வடமாகாணக் கல்வியைத் திட்டமிட்டு அழிக்கும் முயற்சியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்து கல்வி அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றனர். இடமாற்றச் சபையை மீறித் தங்கள் கட்சிகளுக்குச் சார்பானவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்குச் சார்பானவர்களை யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகத் தங்க வைத்துவிட்டுக் கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரிய சேவையை செய்த ஆசிரியர்களை மீண்டும் வெளிமாவட்டம் அனுப்புகிறார்கள். தீவகம் மற்றும் மருதங்கேணிப் பிரதேசங்களில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சேவை ஆற்றிய ஆசிரியர்களை தமக்கு இயைவானவர்களை யாழ்ப்பாணத்தில் தக்க வைத்துக் கொள்வதற்காக, 'சேவையின் தேவை' என்ற போர்வையில் ஆசிரியர்கள் பழிவாங்கலுக்கு உட்படுகின்றனர்.

வடக்கு கல்வித்துறையில் ஊழல் புரிந்த அதிகாரிகள் தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்கும், உயர் பதவிகளை அடைவதற்காகவும் தேசிய மக்கள் சக்திக்குப் பின்னால் இந்த முறைகேடான இடமாற்றத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த இடமாற்றத்தில் பல குறைபாடுகள் உள்ளன என வடமாகாண ஆளுநருக்கு எழுத்து மூலம் ஆசிரியர் சங்கம் தெரியப்படுத்தியும் அவரும் தேசிய மக்கள் சக்தியின் நிகழ்ச்சி நிரலை மேற்கொள்வதில் உறுதுணையாக இருக்கிறார். யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தொடர்பான கருத்து எழுந்தபோது முண்டியடித்துக் கொண்டு இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வந்ததே தீர வேண்டும் என்று ஆளுநர் கூறியதில் எமக்கு பல சந்தேகங்கள் உள்ளன.

வெளிமாவட்டங்களுக்கு ஆசிரிய பங்கீடு அவசியம் என்பதை ஆசிரியர் சங்கம் எப்போதும் கூறிவருகிறது அதற்கு எதிராகச் செயற்பட்டதும் இல்லை. ஆனால் வெளி மாவட்டமே செய்யாத பல ஆசிரியர்கள் அரசியற் கட்சிகளின் செல்வாக்குடனும், உயர் அதிகாரிகளின் செல்வாக்குடனும் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பதை நாங்கள் தீர்க்கமாக எதிர்க்கின்றோம். எமது கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் வரை தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொள்வோம் - என்றார். (அ-ம-20-66-26)

### தறப்பாள்...

களை விடுவிக்க வேண்டும் என்று அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடும் மழை என்பதால், அவர்கள் தமது போராட்டப் பகுதியில் தற்காலிகமாக தறப்பாள் கட்டியிருந்தனர்.

அதற்கே பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

தறப்பாளை அகற்றாவிடில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் பொதுமக்களை மிரட்டும் தொனியில் தெரிவித்துள்ளார். அதற்கு, 'மழை காரணமாகவே தறப்பாள் கட்டப்பட்டுள்ளது. மழை ஓய்ந்ததும் தறப்பாள் அகற்றப்படும்' என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனினும், பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்கவில்லை. போராட்டப் பகுதிக்கு ஊடகங்கள் சென்றதைத் தொடர்ந்தே அவர் மக்களை மிரட்டும் போக்கைக் கைவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-20)

### பயணிகள்...

துறைக்கு வருமா என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இடம்பெற்றுவரும் ஒரேயொரு பயணிகள் கப்பல் சேவையாக காங்கேசன்துறை நாகபட்டினம் இடையிலான கப்பற்சேவை அமைந்துள்ளது. அவ்வப்போது இயந்திரக்கோளாறு காரணமாக கப்பற்சேவை தடைப்பட்டுவந்த நிலையில் இந்த மாதத்தின் முதல் வாரத்தில் அடுத்தடுத்து இரு தடவைகள் பயணிகளுடன் நடுக்கடலில் அந்தக் கப்பல் பழுதடைந்திருந்தது. இதனால், மக்கள் பெரும் இழுபறிக்கு மத்தியில் கரை சேர்க்கப்பட்டிருந்தனர்.

கடந்த 8ஆம் திகதி காங்கேசந்துறையில் இருந்து நாகை சென்ற நிலையில் மீளவும் கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. கடந்த 13ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கூறப்பட்டிருந்த நிலையில் தற்போதுவரை பயணிகள் கப்பல் சேவை இயங்கப்படவில்லை. இவ்வாறிருக்கையில், எதிர்வரும் 20ஆம் திகதி நாகபட்டினத்தில் இருந்து காங்கேசந்துறை நோக்கி கப்பல் புறப்படும் என்று தொடர்புடைய நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் குறித்த சேவை ஆரம்பிக்குமா என்பது இது வரை உறுதிசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

### ஜூன் 20ஆம்...

வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட 'வட்டுக்கோட்டை 50' நினைவெழுச்சி மாநாடு ஜூன் மாதம் 20ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டது.

1976 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டுநினைவை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் நினைவெழுச்சி மாநாடு நடைபெறவிருந்தது. அந்த மாநாடே தற்போது ஜூன் மாதம் 20ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. (அ-ம-26-20-66)

### புலிகளுக்கு...

முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. சிங்களதீப தேசிய அமைப்பின் தலைவர் ஜயந்த லியனகே தலைமையிலான குழுவினரால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் ஆதரவானவர்கள் கத்தோலிக்க திருச்சபைக்குள் உள்ளனர். அவர்கள் தொடர்பில் வத்திக்கான் உடனடியாக நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று தமது முறைப்பாட்டில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம)

### இராணுவ...

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

வலி. வடக்கில் படையினரால் 650 ஏக்கருக்கும் மேற்பட்ட எமது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். எனினும், எமது கோரிக்கைகள் எவையும் செவிமடுக்கப்படவில்லை. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதிகளை வழங்குகின்ற போதிலும் இதுவரை எமக்கு ஏமாற்றமே எஞ்சியுள்ளது. எனவே, மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்று தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காணிகளை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-26-20)

### போதனாவின்...

மல் இடம்பெறுகின்றன - இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியம் எரிந்து அழிந்த போதிலும், அனைத்து மருந்துகளும் அழிந்தன என்று அர்த்தமில்லை. பிரதான மருந்துக் களஞ்சியத்தில் இருந்து உப மருந்துக் களஞ்சியத்துக்கு அனுப்பப்பட்ட மருந்துகள் பத்திரமாக மீட்கப்பட்டன. அதேபோல், தீப்பரவல் ஏற்பட்டவேளை பல மருந்துகள் மீட்கப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டன.

இந்த அழிவின் பின்னர் சுகாதார அமைச்சால் 8 பாரவூர்திகளில் மருந்துகள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆதலால், யாழ்ப்பாணம் போதனாவின் செயற்பாடுகள் எந்தத் தொய்வும் இல்லாமல் இடம்பெற்று வருகின்றன. எனவே இது தொடர்பில் பொது மக்கள் அச்சப்படத் தேவையில்லை.

இந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து அழிந்த மருந்துகள் மற்றும் மீட்கப்பட்ட மருந்துகள் தொடர்பில் ஆராய்வதற்கு எம்மால் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் தற்போது தமது பணியை மேற்கொண்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருந்துக் களஞ்சியமொன்றை அமைக்கும் பூர்வாங்கப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதற்கு சுகாதார அமைச்சின் உதவியும், ஆலோசனையும் பெறப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரமளவில் இந்தப் பணிகள் ஆரம்பமாகும் - என்றார். (அ-ம-26)

### யாழ். பல்கலையில்...

நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கட்டடத் தொகுதியில் இன்று தொடக்கம் நாளைமறுதினம் வரை இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இந்தக் கண்காட்சியைப் பார்வையிட முடியும்.

ஈழத்தமிழினத்தின் வலிகளை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

### குமுதினிப்...

தீவு மாவிலித்துறையில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிப் பயணித்த குமுதினிப் படகு இடைமறிக்கப்பட்டு, அதில் பயணித்த பச்சிளம் குழந்தை உட்பட 36 பேர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் 41ஆவது ஆண்டுநினைவுதினமே நேற்று உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. நெடுந்தீவு பங்குத் தந்தை, வேலன் சுவாமிகள், அரசியற் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்ம சாந்திக்காக நெடுந்தீவு மாவிலித்துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், நெடுந்தீவு மாவிலித்துறை சவேரியார் ஆலயம், நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலயம் மற்றும் நெடுந்தீவு தேவசபை ஆலயம் என்பவற்றில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வழிபாடுகளும் நடைபெற்றன. (அ-ம-26-20-35-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலுள்ள காணிப்பிரச்சினைகளுக்கு ஜூன் இறுதிக்குள் தீர்வு காணப்பணிப்பு

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு, ஜூன் மாத இறுதி வாரத்துக்குள், சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள் மற்றும் காணி சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து தீர்வு காணவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

அரச காணி வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய காணிச் செயற்பாடுகள், காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ், காணிக் கச்சேரி மூலம் ஆவணங்கள் வழங்கப்பட வேண்டிய காணிகள், அரச காணிகளை வர்த்தக நோக்குடன் கூடிய விவசாய நடவடிக்கைகளுக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குதல், பிரதேச



சபைகளின் ஆளுகைக்குட்பட்ட இதுவரை கையளிக்கப்படாத காணிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதி யாழ்.மாவட்டக் காணிப் பயன்பாட்டுக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளமையால், அதற்கு முன்னதாக பிரதேச காணிப் பயன்பாட்டுக்குழுக் கூட்டத்தை நடத்தி, எடுக்கப்பட்ட தீர்மானங்களை யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்தினார். டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக யாழ்.மாவட்டத்தின் காணி தொடர்பான நடமாடும் சேவையொன்றை, மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் நடத்த ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிளுக்குப் பணித்தார். (சு-66-பி)



## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சமூக பராமரிப்பு நிலையம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்ட சமூக பராமரிப்பு நிலையம் கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டது. சிறுவர்கள், பெண்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவையுடையோர் என பல்வேறு தரப்பினரும் தமக்கான சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், இந்தப் புதிய சமூக பராமரிப்பு நிலையம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பல்வேறு நிறுவனங்களினூடாக வழங்கப்படும் சுமார் 60 வகையான சேவைகளை, ஒரேயிடத்தில் பெற்றுக் கொள்ள முடியும். நிகழ்வில் இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் மத்தியூ டக்வொர்த், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ. உமாமகேஸ்வரன், ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜொகான் ரொபேர்ட், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் உதவிப் பிரதம செயலாளர், சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர், பிரதேச செயலகப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (சு-27,113)

## பரிசளிப்பு விழா

நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் நடாத்தும் 39 ஆவது சைவசமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கணேசராசா நினைவரங்கில் நடைபெறும். நிலையத் தலைவர் க.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (சு-66)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில் மத்தி வேலாயுதம் வீதி, (A9 வீதிக்கு அருகாமையில்) 4 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு.

077 154 5512

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்கால் இனப்படுகொலை நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு நாவலர் சனசமூக நிலையம், நாவலர் விளையாட்டுக்கழகம் மற்றும் விடியல் அமைப்பு ஆகியன இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் சுதுமலை வடக்கு நாவலர் சனசமூக நிலையத்தில் நாளை காலை 8.30 மணியில் இருந்து நண்பகல் 2 மணிவரைக்கும் நடைபெறவுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



### Dr. வைத்திலிங்கம் சிறீகாந்தா

(ஓய்வுநிலை தொற்றாநோய் மருத்துவ பணிப்பாளர், சுகாதார அமைச்சு, இலங்கை)

(CS/31810) J-1

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மருத்துவர் வைத்திலிங்கம் சிறீகாந்தா (ஓய்வுநிலை தொற்றாநோய் மருத்துவ பணிப்பாளர், சுகாதார அமைச்சு, இலங்கை) அவர்கள் நேற்று (15.05.2026) வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் சிவபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மருத்துவர் வைத்திலிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் காசிநாதன் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், ஓய்வுபெற்ற குழந்தை வைத்திய நிபுணர் திருமதி கனகமலர் அவர்களின் அன்புக் கணவரும், பவகுகன் (ஐக்கிய இராச்சியம்), லக்ஷ்மி (கனடா) ஆகியோரின் பாசம்மிகு தந்தையாரும், சாந்தி, கஜமுகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரன், அத்மொன், ஜெனிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், சிற்சபேசன், சர்வேஸ்வரன் மற்றும் விஜயலக்ஷ்மி, பூம்புகழேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (17.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பொரளை ஜயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை மறுதினம் (18.05.2026) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் கிரியைகள் இடம்பெற்று, முற்பகல் 11.30 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்

077 731 9769



## லக்னோவிடம் சென்னை படுதோல்வி!

### குறைகின்றது பிளேஓப் வாய்ப்பு

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மிக முக்கியமான ஆட்டத்தில் லக்னோ அணியிடம் சென்னை அணி தோல்வியடைந்தது.**

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து பிளேஆப் செல்லும் வாய்ப்பு சென்னைக்குக் குறையத் தொடங்கியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னோ அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக கார்த்திக் சர்மா 71 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ஆகாஷ் சிங் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணி 16.4 ஓவர்களில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. மிச்செல் மார்ஷ் அபாரமாக விளையாடி 38 பந்துகளில் 90 ஓட்டங்களைக் குவித்தார். லக்னோ அணி தொடரில் இருந்து ஏற்கனவே வெளியேறிவிட்ட நிலையில், சென்னை அணிக்கு இன்னும் இரண்டு ஆட்டங்கள் மீதமுள்ளன. அந்த இரண்டு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே பிளேஓப் வாய்ப்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media